



Signature Not Verified
Signed by: Assistant Director

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (சேலம் மாவட்டம்)

## மேச்சேரி பேரூராட்சி

**சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி பேரூராட்சி/கிராமம், ச.எண்கள்:261B/2D,261B/2G,261B/2F2 - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

கோப்பு எண் : SLM/ ERAA207B / 6406 /2022
இணையதள விண்ணப்ப எண் : ERAA207B
அளவுத் திட்டம் : 1:400

வ

குறிப்பு:

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 2.19 ஏக்கர் (அ) 8864.00 ச.மீ |
| மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட | : 2830.46 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : 6033.54 ச.மீ |
| மனைப்பிரிவு எல்லை | |
| உத்தேச மனைப்பிரிவு சாலை | |
| நிலையிலுள்ள சாலை | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | : 41 |

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| மனை எண்கள் (1-41) | : 41 |

பொது ஒதுக்கீடுகள்: உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கபட்டவை.

| | | |
|---|---|---|
| உத்தேச மனைப்பிரிவு சாலைகள் பரப்புளவு மற்றும் மூலை முடக்குகளின் பரப்புளவு | : 2830.46 ச.மீ | |

பொது உபயோகம்:

| | | |
|---|---|---|
| A. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக பரப்பளவு | : 32.54 ச.மீ | = 0.54% |
| B. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | : 32.54 ச.மீ | = 0.54% |

அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019–ன் படி பூங்காவிற்கான அரசு வழிகாட்டு மதிப்பின்படி தொகையை மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு : : 12.00 மீ சாலைகள் வரை 1.50x1.50 மீ

## நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019–ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020–ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. அரசாணை எண்:181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி நச4(3)த் துறை நாள் 09.12.2020–ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்..
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் – குத்தகை பத்திரம் – பட்டா – தானப்பத்திரம் – பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டும் சரிபார்க்கப்படுகிறது அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
9. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின்கம்பிபாதையை மனுதாரர் தனது சொந்த செலவில் மனைப்பிரிவு சாலைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு செயல் அலுவலர் / பொறியாளர் (EO/AE) அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

APPROVAL No: SWP/ DTCP/ SALEM/ LAYOUT No: 159 / 2023

உதவி இயக்குநர் (மு.கூ.பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.